12

# செந்தமிழ்த்தாய்

எம்மை அன்புடன் பெற்றுவளர்த்த தாய்க்கு எவ்வளவு அன்பும் நன்றியும் உடையேமாயிருக்கின்றோம். அதுபோலவே, அறிவாகிய பால்தந்து பெரியோராக வளர்த்து வருகின்றவள் அருமைத் தமிழ்த்தாய் ஆவாள். ஆங்கிலம், சிங்களம் முதலிய வேற்றுமொழிகளைக் கற்று எங்கள் பழைய சிறந்த பழக்க வழக்கங்களை நீக்கிவிட்டோம். தமிழ் ஆசாரங்களையும் உயர்ந்த அறிவின்பங்களையும் உறுதிமொழிகளையும் தமிழ்த்தாய் வைத்திருக்கின்றாள். தமிழ்மொழியைப் படித்தால் அவைகளை யறிந்து இவ்வுலகிற் பெரியோராக வாழலாம்.

1

செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்
தெய்வத் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமி லெம்மொழி மாதா - படும்
அல்லலைத் தீர்க்க அறிவுவ ராதா செந்

2

முச்சங்கத் தரியணை யேறி - மன்னர்
முடிதொட்ட மூவரும் அடிதொட்டுப் போற்ற
விச்சையா லரசாண்ட மாதா அவள்
வேதனை தீர்க்க விரக்கம்வ ராதா - செந்

3

இன்னமு தோதெளி தேனோ - என
எஞ்செவிக் கினிக்கின்ற மொழியெது தானோ
அன்னை மொழிதனை நாமோ - வெறுத்
தருவருத் தவமதித் திடலழ காமோ - செந்



இலவச விநியோகத்திற்காக

4

சிந்தையிற் றேனமு தூறி - நாவில்
தித்தித்துத் தித்தித்துச் செவிவழி யேறி
வந்து கனிந்திருள் கீறி - எம்மை
வாழ்விக்கும் மொழியினை மறப்பதோ மீறி - செந்

5

வேற்று மொழிகளைக் கற்றோம் - எங்கள்
மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம்
ஆற்றிலே புளிகரைத் திட்டோம் - ஐயோ
அருமந்த தமிழினை யறியாது கெட்டோம் - செந்

*- சோமசுந்தரப்புலவர் -*